உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

# அரச நிறுவனங்களுக்கான அறிவித்தல்

## அரசாங்க நிறுவனங்களினால் பொருட்கள் மற்றும் சேவைகளினைக் கொள்வனவு செய்யும் போது பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவினை மேற்கொள்வது தொடர்பானது.

பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களினால் அறவீடு செய்யப்படுகின்ற பெறுமதி சேர் வரியானது (பெ.சே.வ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து பெறுமதி சேர் வரிக்குப் பதிவு செய்து கொள்ளாத சில வழங்குனர்களினால் அரச நிறுவனங்களுக்கு வரி விபரப்பட்டியல்கள் (TAX Invoice) வழங்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

பொருட்கள் மற்றும் சேவைகளின் அனைத்து வழங்குனர்களும் பெறுமதி சேர் வரி மற்றும் பெறுமதி சேர் வரிக்காகப் பதிவு செய்து கொள்வதில்லை என்பதால் பதிவு செய்து கொண்ட வழங்குனர்கள் மட்டுமே பெறுமதி சேர் வரிக்கான விலை விபரப்பட்டியல்களினை வழங்க முடியும். வரி விபரப்பட்டியல்களுக்குப் (TAX Invoice) பதிவு செய்து கொள்ளாத ஏனைய அனைத்து வழங்குனர்களுக்கும் சாதாரண வரி விபரப் பட்டியல்களே வழங்கப்படுதல் வேண்டும்.

எனவே, ஏதேனும் அரசாங்க நிறுவனங்கள் வழங்குனர்களுக்குப் பெறுமதி சேர் வரியினைச் செலுத்துகின்ற போது, குறித்த வழங்குனர் நிறுவனமானது பெறுமதி சேர் வரிக்குப் பதிவு செய்து கொண்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதற்காகப் பின்வரும் நடைமுறைகளினைப் பின்பற்றுதல் வேண்டும்.

- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பெறுமதி சேர் வரியினைப் "பதிவு செய்து கொண்டமைக்கான சான்றிதழ்"
- இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உரிய பிராந்திய அலுவலகத்தின் ஆணையாளருடனும், 011-2134250-4 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகத் தலைமையலுவலகத்துடனும் தொடர்பு கொண்டு விபரங்ளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பொது நலன்களுக்குப் பயனளிக்கும் வகையில் அரச வருமானம் பங்களிப்புச் செய்யப்பட வேண்டியிருப்பதால், இது தொடர்பில் தங்களின் மேலான கவனத்தினைச் செலுத்தவும்.

**மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து 1944 எனும் இலக்கத்தினை அழைப்பதனூடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அழைப்பு நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்**

**உள்நாட்டு இறைவரி இணையத்தளம் : www.ird.gov.lk**

**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

வரி - சிறந்ததொரு எதிர்காலத்திற்காக